[2005 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ்.எம். பாலன்.

திரு. எஸ்.எம். பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய மருத்துவமனைக்கு நிதி அனுமதித்ததற்கு மருத்துவத் துறையில் சரித்திரம் படைக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின், பொற்பாதம் தொட்டு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 245, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*

245—

ஆரம்ப சுகாதார நிலையம்

***59107—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேர்ணாம்பட்டு தொகுதி, மேல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாக நவீனப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு தொகுதியில், மேல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கைகள் வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

செல்வி சி. கனகதாரா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் தங்கத் தாரகை மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்கி என்னுடைய வினாவைத் தொடுக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேர்ணாம்பட்டு தொகுதியில் மேல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் நூற்றுக்கணக்கான புறநோயாளிகள் தினமும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இது மிகவும் பழமை

2005 மார்ச் 30]

வாய்ந்தது. இந்த நிலையில் எல்லியபுரம், லாவிதம்பட்டி, கார்கூர், பல்லளக்குப்பம், செண்டத்தூர், எம்.இ. குப்பம், நாகதோப்பு, நல்லியம்பட்டு, கைலாசகிரி ஆகிய பத்துக்கும் மேற்பட்ட கிராம மக்கள் இந்த மருத்துவமனையில்தான் சிகிச்சை பெற்று வருகின்றனர். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, பொதுமக்களின் தேவையைக் கருதி மேல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்படுவதற்கு, ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய நான் விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் 2001–லிருந்து 2005 வரையில் கிட்டத்தட்ட, 104 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அந்த 104 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் தரம் உயர்த்தப்பட்டது மட்டுமல்லாமல், ஒன்றியத்திற்கு ஒன்று என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கும்போது, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகின்ற நிதியாண்டிலே, அவருடைய மருத்துவமனையைத் தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 246, திரு. ப. அரசன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

246—

கைமுறை காகித ஆலை

***46099—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோயில் நகரில் கதர் வாரியம் மூலம் கைமுறை காகித ஆலை தொடங்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

LEGISLATIVE ... TRUTH ALONE TRIUMPHS